Ph:9444844423, 9283739823
N.V.Srinivasan M.A,M.Phil

# குழி தர்ப்பணம்

*10* நாள் பங்காளிகள் இறந்தவரைவிட வயதில் சிறியவர் க்ஷவரம் பண்ணிக்கொண்டும், பெரியவர் க்ஷவரம் இல்லாமலும் இந்த தர்பணத்தைப் பண்ணவேண்டும்.

பங்காளிகள் தீட்டுள்ளவர்கள் யாரும், பெருமாளிடம் எதற்காகவும் செல்லக்கூடாது, சந்தியாவந்தனம் காயத்ரி ஜபம் (10மட்டும்) எப்போதும் உண்டு.

தீர்த்தமாடி ஒற்றை ஈர வேஷ்டியுடன் திருமண் மட்டும் இட்டுக் கொண்டு உபவீதத்தில் ஒரு பில் பவித்திரத்துடன் ஒதுக்குப்புறமான (ஒரு மரத்தடியில், ஒரு செடியின் கீழ்) இடம் தேர்ந்தெடுத்து முதலில் ஸேவித்துவிட்டு கிழக்குப்பார்க்க உட்கார்ந்து ஒரு பில் ஆசனம் ஒரு இடுக்குப்பில்லுடன் ப்ராணாயாமம்.

ப்ராசீனாவீதி . தொடையில் கைவைத்து ஹரிஓம் தது ஸ்ரீ கோவிந்தா கோவிந்த கோவிந்தா அஸ்யஸ்ரீ பகவத: மஹா புருஷஸ்ய விஷ்ணோ: ஆஜ்ஞயா ப்ரவர்த்தமாநஸ்ய அத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே ஸ்ரீச்வேத வராஹ கல்பே வைவஸ்வத மந்வந்தரே கலியுகே ப்ரதமே பாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதக்கண்டே சகாப்தே மேரோ: தக்ஷிணே பாாச்வே அஸ்மிந்நு வர்த்தமாநே வ்யவஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே .. .(1) . . நாமஸம்வத்ஸரே ..(2)... அயனே ..(3) . . ருதௌ . .(4) . . மாஸே . .(5) . பக்ஷே . . . (6) . . திதௌ . .(7) . வாசரே . .(8) . . நக்ஷத்ரே ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம். . .(6). . திதௌ ஸ்ரீ பகவதாக்ஞயா . . .(9)... ம் ... (10) கோத்ராயா: . . . (11) ... நாம்நீயா: மம ஜ்ஞாதீபூத ப்ரேதாயா: அத்ய. தசமே அஹநி தஹன ஜநித க்ஷுத் த்ருஷ்ணா தாஹ தாப உபசமனார்த்தம் ப்ரேதா ஆப்யாயனார்த்தம் ப்ரேதா த்ருப்த்யர்த்ம் தடாக தீர குண்டே அதீத ப்ரதமதினம் ஆரப்ய அத்ய தசம தின பர்யந்தாநி அஹரஹஹா கர்த்தவ்யானி பஞ்ச சப்ததி திலோதகாநி கரிஷ்யே!

தத்காலே க்ருச்ர ஆசரணஞ்ச கரிஷ்யே!

இடுக்குப் பில்லை தெற்கே சேர்க்கவேண்டியது. ஐந்து ரூபாய் சில்லரை சிறிது எள் எடுத்துக்கொண்டு ஹிரண்ஹகர்ப்ப கர்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸோ: அனந்த புண்ஹபலதம் அத:சாந்திம் ப்ரயச்சமே திலோதக ப்ரதான காலே திதி வார நக்ஷத்திர லக்ன யோக கரணை: யோதோஷ: ஸமஜனி தத்தோஷ பரிஹாரார்த்தம் ப்ராஜாபத்ய க்ருச்ர ப்ரத்யாம்நாயம் யத்கிஞ்சிது ஹிரண்யம் ஸ்ரீ வைஷ்ணவாய ஸம்ப்ரததே

என்று தீர்த்தம் சேர்த்து கட்டை விரல் வழியாக விட்டுவிடவேண்டியது! நம: நமமா அச்சுயுத: ப்ரீயதாம்! என்று சொல்லறது.

மண் அல்லது மணலால் ஒரு வட்டமான குண்டம் செய்து அதன் நடுவில் ஒரு தர்பம் எடுத்துக்கொண்டு நடுவில் ஒரு முடிச்சு போட்டு அந்த குண்டத்தின் நடுவில் வைத்து அது நகர்ந்துவிடாமல் இருக்க

அதன்மேல் ஒரு கல்லையும் வைக்கவேண்டியது.

"ஆயாஹி ஜ்ஞாதீபூத ப்ரேதே, சோம்யா கம்பீரை: பதிபி: பூர்வ்யை: ப்ரஜாம் அஸ்மப்யம் தததீ ரயிஞ்ச தீர்காயுத்வஞ்சா சதசாரதஞ்சா - கோத்ராம் நாம்நீம் மம ஜ்ஞாதீபூத ப்ரேதாம் அஸ்மிந் தர்பே இத ஏஹி, ஆவாஹயாமி" என்று சொல்லி அதன்மேல் சிறிது எள் சேர்க்கறது.

"இதந்தே ஆஸநம், இதந்தே ஆச்சனம்" என்று சொல்லி எள்ளும் ஜலமுமாக விட்டு "இதம் தூஷ்ணீம் திலோதகம்" என்று சொல்லறது.

ஒரு தர்பத்தை கட்டைவிரலில் சுற்றிக்கொண்டு கட்டைவிரல் நுனி வழியாக எள்ளும் ஜலமுமாக விடவேண்டும்.

தஹன ஜநித க்ஷுத் த்ருஷ்ண தாஹ தாப உபசமனார்த்தம் ப்ரேதா ஆப்யாயனார்த்தம் ப்ரேதா த்ருப்த்யர்த்ம் தடாக தீர குண்டே (பாரத்வாஜ) . .. கோத்ராயை . (லக்ஷ்மி). நாம்நீயை மம ஜ்ஞாதீபூத ப்ரேதாயை ழூஅதீத ப்ரதம தின கர்தவ்யம் ஏதத் திலோதகம் ததாமி! என்று சொல்லி குண்டத்திற்குள் கட்டைவிரல் வழியாக எள் ஜலம் விடவேண்டியது.

இதுபோல் 1ம்நாள்-3தரம், 2-4,3-5,4-6,5-7,6-8,7-9,8-10,9-11,10-12தரம் விடவேண்டியது.

ழூஅதுபோல் ப்ரதம என்பதற்கு பதில் அடுத்தடுத்த நாளைக்கு த்விதிய-த்ருதிய-சதுர்த்த - பஞ்சம - ஷஷ்ட - ஸப்தம - அஷ்டம - நவம - தசம என்ற வார்த்தைகளை மாற்றிக் கொள்ளவேண்டியது. பத்தாம் நாளன்றைக்கு "அதீத தசம" என்று சொல்லாமல் "அத்ய தசம" என்று சொல்லவேண்டியது. திலோதகம் முடித்தபின் தர்பத்தைப் போட்டுவிட்டு கையைக் கூப்பிக்கொண்டு

"கோத்ரே நாம்நீ மம ஜ்ஞாதீபூத ப்ரேதே மயாக்ருதாநி அதீத ப்ரதமதினமாரப்ய அத்ய தசமதின பர்யந்தானி அஹரஹ: கர்த்தவ்யாநி ஏதாநி வாசோதகாநி உபதிஷ்டா, ஏதாநி திலோதகாநி உபதிஷ்டா" என்று கை காமித்து

"அத்ர ஸ்நாஹி ஜலம் பிபா, த்ருப்தா பவா, சீதா பவா" என கட்டைவிரல் வழியாக தீர்த்தம் விட்டு

"மார்ஜயதாம் மம ஞாதீபூத ப்ரேதா" என சொம்பு ஜலத்தால் குண்டத்தை அப்ரதக்ஷிணமாக சுற்றி கவிழ்த்து கீழே ஓடும் ஜலத்தைத் தொட்டு சொம்பை ப்ரோக்ஷித்து நிமிர்த்தி வைத்துவிட்டு, உபவீதி உபவீதத்தில் எழுந்து ஸேவிக்கவேண்டியது. (அபிவாதி கிடையாது.)

ஸேவித்தபின், ப்ராசீனாவீதி பண்ணிக்கொண்டு "... கோத்ரே ... நாம்நீ மம ஜ்ஞாதீபூத ப்ரேதே அஸ்மாது தர்பாது உத்திஷ்டா, இத: ப்ரயாஹி" என்று சொல்லி ஆவாஹனம் பண்ணின தர்பத்தின்மேல் எள்சேர்த்து தற்போது யதாஸ்தானம் பண்ணவேண்டியது.

அந்த தர்பத்தில் உள்ள முடிச்சைப் பிரித்துப் போட்டுவிட்டு உபவீதி பண்ணிக்கொண்டு கையில் உள்ள பவித்திரத்தையும் பிரித்துப்போட்டு ஆசமனம் பண்றது. "ஸர்வம் ஸ்ரீ க்ருஷ்ணார்பணமஸ்த்து அச்சுயுதப்ரீயதாம்" என்று சொல்லிவிட்டு திரும்பவும் தீர்த்தமாடிவிட்டு ஆத்துக்குள் போகவேண்டும்.